# தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

*திருவழிப்பாட்டு ஆண்டு* B (15-03-2015)

### *திருப்பலி முன்னுரை*

இறைமகன் இயேசுவில் அன்புநிறை சகோதர்களே! சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் வணக்கம். தவக்காலத்தின் நான்காம் ஞாயிற்றின் மகிழ்ச்சி நிறை வாழ்த்துக்களைக் கூறி மகிழ்கிறேன். திருவழிபாட்டு ஆண்டில் தவக்காலத்தின் 4ஆம் வாரம் மகிழ்ச்சியின் ஞாயிறு. 'லத்தாரே சண்டே' என்று சிறப்புக் காரணங்களுக்காக அழைக்கப்படுகிறது. அத்துடன் இன்றுதான் உயிர்ப்புப் பெருவிழா திருவிழிப்புத் திருப்பலியில் புதிதாகத் திருமுழுக்குப் பெறுபவர்கள் ஆயத்தக்காரர்களாகத் தேர்வு செய்யப்பட்டு இறைமக்களோடு வழிபாடுகளில் பங்கேற்பதற்காக இணைத்துகொள்ளும் புகுமுகச் சடங்கும் நடைபெறும்.

இறையன்பின் தன்மையை நாம் இன்றைய இறைவார்த்தைகள் ஊடாக அறிந்து கொள்ள இன்று நமக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்புகொண்டுள்ளார். குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர் பெறச் செய்தார். நாம் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே என்பதே அவ்வுண்மைகளாகும். அத்தோடு நாம் யார்?, நமது பணி என்ன? என்ற தெளிவுகளும் விளக்கியுரைக்கப்படுகின்றன. அதாவது நாம் கடவுளின் கைவேலைப்பாடு: நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதே அவையாகும். நாமும் உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பிய நம் தந்தை இறைவனின் அன்புக்குப் பிரமாணிக்கமாய் வாழ்ந்து, அருள் ஆசீர்வாதங்களைப் பெற்றிட வரம் கேட்டு நம்மை அர்ப்பணித்தவர்களாய் இத் திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**தந்தையே இறைவா!**

இன்றைய உலகில் நிலவுகின்ற பலவிதமான தவறான கொள்கைகள், சித்தாந்தங்கள் இவற்றின் மத்தியில் திருச்சபையின் விசுவாச வாழ்க்கைப் பயணத்தில் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், மற்றும் துறவறத்தார் அனைவரும் இறைவார்த்தை காட்டுகின்ற பாதையில் திருச்சபையை வழி நடாத்திச் செல்ல தூய ஆவியின் துணை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்றும் எம் சார்பாக செயலாற்றும் தந்தையே இறைவா!**

நாங்கள் ஒவ்வொரும் இத் தவக்காலத்தில் உறவுகளைப் புதுப்பித்துக்கொண்டு, அடுத்தவரின் நல் வாழ்விற்காக எம்மையே அர்ப்பணித்து, உமக்கேற்ற அர்த்தமுள்ள வாழ்வு வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைககைக் கொண்டுள்ள தந்தையே இறைவா!**

நாங்கள் ஒவ்வொரும் இத் தவக்காலத்தில் எம் கிறிஸ்தவ வாழ்வின் தன்மையை உணர்ந்து எந்நாளும் நிலைத்திருக்கும் உமது நெறிமுறைகளின் பொருளை சரியான முறையிலே விளங்கிக் கொண்டு, அவற்றைச் சரியாகக் கடைப்பிடித்து வாழும் வரத்தை அளித்திடவும், கடின நோய்களினால் பாதிக்கப்பட்டு வீடுகளிலும், மருத்துவ மனைகளிலிருந்தும் வேதனைப்படும் அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம். மக்களை வாட்டி வதைக்கும் எல்லா நோய்களும் அகன்று, அவர்கள் சுகமடையவும், அவர்களுடைய வேதனைகளைத் தணித்தருளவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அருள் வாழ்வை அள்ளி வழங்கும் இறைவா!**

இன்றைய நாளில் இறைவார்த்தை யூடாக எமக்கு நீர் தந்திருக்கும் உமது செய்தியையும், விருப்பத்தையும் , சித்தத்தையும், வழிகாட்டுதல்களையும் நாம் சரியான விதத்திலே புரிந்துகொண்டு, உமது வாக்குறுதிகளில் நம்பிக்கை கொண்டு, தீமைகளை விட்டுவிட்டு மனமாற்றமடைந்து உமது விருப்பப்படி நடக்க வேண்டிய ஞானத்தை எமக்குத் தந்தருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தாயும் தந்தையுமான எம் இறைவா!**

பிறருக்கு நன்மை செய்பவர்களை மனமுவந்து பாராட்டவும், ஏற்றுக்கொள்ளவும், குறை கூறுகின்ற தெளிவற்ற பார்வை எம்மில் மாறிடவும், இங்கே குழுமியுள்ள ஒவ்வொரு சகோதர சகோதரிகளுக்காகவும், இங்கே வரஇயலாதவர்களுக்காகவும் மற்றும் இங்கே வரமனமில்லாதவர்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். நல்ல ஆயர்களாக, நாங்கள் அனைவரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் என்ற மனநிலையோடு ஒரே மந்தையில் என்றுமே வாழ வரமருள வேண்டுமென்று தாயும் தந்தையுமான எம் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.